

அன்பின் கங்கை அன்னை திரேசா

Jan - Feb 2012

வாசகர்களின் இதயத் துடிப்பு

# அலை ஓசை

இதழ் 04

**FREE ISSUE**

**4 வயது மாணவன் கூட பெற்றோருடன் UK செல்லும் அரிய வாய்ப்பு**

பக்கம் 10

**இப்படியும் ஆண்களா?**

பக்கம் 12






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Contents


| | |
|---|---|
| Textile & Shoppings | 1,7,21 |
| Travel & Tours | 4 |
| Printing | 6 |
| Jewelery | 7 |
| Business | 9,21, 32 |
| Science & Technology | 11,16 |
| Medical | 23 |
| Beauty Care | 24 |
| Cargo Service | 25 |
| Education | 5,9,10,31 |
| Studio | 31 |
| Entertainment Article | 08,24,26 |
| Children's Creations | 29 |
| Electronics | 19,17 |
| Domestic | 12,14,18 |



**ATA Aspirations (Pvt.) Ltd.**

No. 122/B, Galle Road, Dehiwala South,
Colombo, Sri Lanka.
Tel: 011 272 2990, 011 720 7989
Hotline: 077 493 9756
Email: info@ataaspirations.com
Web: www.ataaspirations.com


## தேடல் இனிதே தொடர.......

எண்ணற்ற வாசகர்களின் முத்தான வாழ்த்துக்கள் கவியாக மகுடமிட தாமதமானாலும் தரமானதாக முழுமையான உளத்திருப்தியுடன் "அலை ஓசை" நான்காவது இதழானது தனக்கே உரித்தான மிடுக்குடன் வெளிவருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

பயனுள்ள பல அரிய விடயங்களை வாசகர்களின் விருப்பிற்கேற்ப தெளிவாகவும் தரமாகவும் தேடலின் களஞ்சியமாவும் அலைஓசை இங்கு தந்துள்ளதென்றால் அது மிகையாகாது.


அலைஓசையானது தனது ஓசையின் அலைகள் தனது தாய்நாட்டில் மட்டுமன்றி தமிழ் கமழும் உலகின் எல்லா இடங்களிலும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் வாசகர்களாகிய உங்களின் முழுமையான ஒத்துழைப்பும் ஆசிகளும் பயனுள்ள ஆக்கங்களும் தொடந்தும் தன்னை அலங்கரிக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடன் தனது பயணத்தை தொடர்கிறது...

ஒரு சஞ்சிகையானது தனித்து விளம்பர நோக்கம் கொண்டதாக மட்டும் இல்லாது ஆக்கபூர்வமான தகவல்களையும் பயனுள்ள கருத்துக்களையும் தாங்கிச் சென்று வாசகர்களின் அறிவியல் மனங்களைத் தொடவேண்டும். அதன் மூலம் அவர்களது தேடல் தொடரவும் அறிவு மெருகூட்டப்படவும் வேண்டும். இதனால் தான் எத்தனையோ சஞ்சிகைகள் வெளிவந்த போதும் அலைஓசை தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. சஞ்சிகைகளின் பக்கங்களை இடங்கள் சென்றடையாது அவ்விடங்களை அந்த சஞ்சிகைகள் சென்றடைய வேண்டும். அதன் மூலம் தான் வாசகர்கள் பயன்பெற முடியும். விளம்பரம் என்பது சந்தைப்படுத்தலில் மிகவும் முக்கியமான ஒரு விடயம் தான். அவ்விளம்பரம் உரிய முறையில் செய்யப்படுகின்ற போது தான் அதன் பலன் நுகர்வோரையும் உற்பத்தியாளனையும் சென்றடையும். இதனை அலைஓசை நேர்த்தியாக செய்து வருவதால் பயனடைந்த பல வர்த்தகர்கள் அடுத்த இதழ்களுக்கான தங்களது உறுதிப்பாட்டையும் நுகர்வோர் தமது தெளிவான தெரிவினை மேற்கொள்ள முடிந்ததையும் அலைஓசை பெருமிதத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறது. கடந்த எமது ஓசையின் இதழ்களுக்கு கிடைத்த வெற்றிகளால் அலங்கரிக்கப்பட்டு குறைகள் களையப்பட்டு மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டு அற்புதமான கருத்துக்களுடன் வெளிவரும் இவ்விதழ் முன்னரைப்போல இம்முறையும் தன் தனித்துவத்தை நிலைநிறுத்தும் என்ற நம்பிக்கையுடன் எம் அன்பான வாசகர்களின் தேடல் இனிதே தொடர அலைஓசை உங்களுடன் என்றும் கை கோர்க்கும்.

**அலை ஓசை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# PERSONALIZATION

Personalization என்பது இணையத்தளங்களைப் பார்வையிடுபவர்களின் விபரங்கள் விருப்பு வெறுப்புகளைப் பெற்றுக்கொண்டு அவற்றினைச் சேமித்து வைத்து அத்தகவல்களைப் பகுத் தறிந்து அதன்மூலம் சரியான பொருத்தமான தகவல்களை சரியான நேரத்தில் ஒவ்வொரு இணையப்பயன்பாட்டாளருக்கும் வழங்குதலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Personalization Drivers

தற்போதைய தொழில்நுட்பமானது (Technology) இதனைப் பின்வரும் செயற்பாடுகள் மூலம் சாத்தியமாக்குகிறது.

- தகவல் சேமிப்பு
- தொடர்புள்ள பங்குகொள்ளும் இணையத்தளங்கள்
- நடைமுறைகள்

தற்போதைய வலைப்பின்னல் (Network) இதனைச் சாத்தியமாக்ககிறது.

- உலகளாவிய தகவல்கள்
- Standard Internet Protocol

தனிப்பட்டவர்கள் (individuals) இதனைப் பெறுமதியுள்ளதாக்குகின்றது

- அதிக தகவல்களை வழங்குவதன் மூலம்.

## Personalization and Search

தற்போது இணையத்தளங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 10 Billion ஐ எட்டியுள்ளது. இதன் அதிகரிப்பு வீதம் 91% ஆக உள்ளது. அதாவது 7.4 Million page / day ஆக இருக்கிறது.

## Search

இணையப்பயன்பாட்டாளர் பொருத்தமான இணையத்தளத்தை தேடல் பொறியினூடாகக் கண்டறிதலே இதுவாகும்.

## Personalization

இணையத்தளமானது இணையப்பயன்பாட்டாளர் பற்றிய தகவல்களை குறிப்பாக அவரது behavior ஐக் கண்டறிந்து பகுத்தறிந்து பொருத்தமான நேரத்தில் பொருத்தமான தகவல்களை வழங்குதல்.

## Personalization and Marketing

• Choice Assistant பாவனையாளர்களின் தெரிவு (Choice) பற்றிய குழப்பத்தை இது தவிர்க்கிறது
• Mass customization தனிப்பட்டவர்களின் தகவல்களுடன் flexible நிறைந்த தயாரிப்பு அதாவது voice of the customer.
• Relationship Marketing Choice Assistant உம் customization உம் இணையும் போது ஒரு சக்தி வாய்ந்த Personalization உருவாகின்றது அதாவது

Choice Assistant + Customization ⟶ Powerful Personalization

ஆங்கில சொல்லான "BECAUSE" அடுத்தடுத்து தொடர்ச்சியாக 3 முறை வரக்கூடிய ஒரு ஆங்கில வாக்கியத்தைக் கூற முடியுமா?
I LIKE BECAUSE BECAUSE BECAUSE IS A CONJUNCTION.

## பாவனையாளருக்கான நன்மைகள்

1. Automated ஆகவும் Virtual ஆகவும் இருப்பதனால் செலவில்லாதது.

2. மட்டுப்படுத்தப்பட்ட பணத்தைச் செலவு செய்வது எப்படி என்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதால் more effective ஆகவும் Efficient ஆகவும் உள்ளது.

## நிறுவனங்களுக்குரிய நன்மைகள்

1. போட்டியின் மூலமான நன்மைகள் (Competitive Advantages)

2. தற்போதைய தேவைகள் பற்றி அதிகம் அறிதல், எதிர்கால அபிவிருத்தியைக் கண்டறிதல், புதிய தயாரிப்புகள் பற்றிய திட்டங்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்கான பொறிமுறையை வழங்குகிறது.

3. ஒரு தயாரிப்பினைப் முழுமையாக பயன்படுத்தும் திறமை அதிகமாகும்.

## Personalization இன் உபயோகங்கள்

- வாடிக்கையாளர்களுக்கிடையான தொடர்பைப் பேணுகிறது.
- விளம்பரங்களையும் புதிய தயாரிப்புகளையும் குறி வைக்கிறது.
- சந்தைப்போட்டியைப் பேணுகிறது.
- இணையப்பக்கங்களின் உள்ளடக்கங்களைப் பேணுகிறது.
- இணைய அறிவைப் பேணுகிறது.

## ஒரு Personalization System இன் பகுதிகள்

- இணையப்பாவனையாளரைக் கண்டறிதல்
- அந்தப்பாவனையாளரின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பாவனையாளர்களின் விருப்பத்தோடு ஒத்துப் போகின்ற விடயங்களைத் தேர்தெடுத்தல்.
- பாவனையாளருக்குத் இணையப்பக்கத்தில் தோன்றக்கூடிய விதத்தில் அவர்களுக்குரிய விடயங்களைப் பெற்றுக்கொள்ளல்.

## Personalization இற்கான நிபந்தனைகள்

- பாவனையாளர்களின் தகவல்கள்.
- வகைப்படுத்தப்பட்ட தகவல்கள்
- பாவனையாளரையும் வகைப்படுத்தப்பட்ட தகவல்களையும் தொடர்புபடுத்தல்.
- மாறக்கூடிய தகவல்.
- தொழில்நுட்பம்.

## Personalization இன் வகைகள்

• பாவனையாளரின் பெயரை அடையாளம் காணல்.-Name Recognization
• Questionanaires, Surveys, Registration forms ஊடாகப்பாவனையாளர்களின் தகவல்களைப் பெறும் Check- Box personalization

• பூகோள ரீதியாக அல்லது வேறு வழிகளில் பரந்துள்ள பாவனையாளர்களை சிறு சிறு குழுக்களாகப்பிரித்தல்.- Segmentation and Rules
• தனிப்பட்ட முறையில் பாவனையாளர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப இணையப் பக்கங்களிலிருந்து தகவல்களை வழங்குதல். Preference - Based Personalization


மிகக் குறைந்த கட்டணத்தில் அனைத்து நாடுகளுக்குமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள
Contact: 077 5016757








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Personalization
### தொழில்நுட்பங்கள்

ஒவ்வொரு தனிப்பட்ட பாவனையாளனையும் கண்டறிவதற்கு பின்வரும் தொழில்நுட்பங்கள் அவசியமாகிறது.

• Web log analysis
இணையப்பக்கத்திலிருந்து பகுத்தறிந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளல்
• Cookies பாவனையாளருடைய கணனியின் Hard Disk இல் இருக்கும் files.
• User Identification தொடர்பு கொள்வதற்கு User ID உம் Password உம் தேவைப்படுகிறது. அதன் மூலம் நம்பகத்தன்மை அதிகரிக்கிறது.

## Personalization Rules

1. Personalization இன் Objective ஐ தீர்மானித்தல்.
2. Business Rule ஐ தீர்மானித்தல்.
3. Data வைப் பெறுவதற்குத் தயாராக வேண்டும்.
4. முயற்சியை Under Estimate செய்யக்கூடாது.
5. சிறிய முயற்சியாக ஆரம்பிக்க வேண்டும்.
6. இதற்கான செலவுகளையும் வருமானங்களையும் பார்க்க வேண்டும்.
7. Personalization இன் Degree ஐ தீர்மானிக்க வேண்டும்.

## Personalization Challenges

1. Personalization பற்றிய சரியான அளவீடு.
2. Personalization தாக்கம்.
3. அளவுக்கதிகமான Personalization குழப்பத்தை ஏற்படுத்தும்.
4. தகவல்களின் தேவைகள்.
5. Personalization இற்கான செலவுகளை அனுமானித்தல்.


Raj Arts Print
இராஜ் ஆர்ட்ஸ் பதிப்பகம்
Planning & Plate Making
• வாழ்த்து மடல்கள்
• Cake Box வகைகள்
• Bill Books, Visiting Cards
• திருமண அழைப்பிதழ்கள்
• பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
• பூப்புனித நீராட்டுவிழாஷ அழைப்பிதழ்கள்
• நினைவு மலர்கள் (கல்வெட்டு)
• நினைவு மலர் கவர் (கல்வெட்டு கவர்)
• சஞ்சிகைகள், மலர் வகைகள்
• துண்டு பிரசுரங்கள் (Hand Bills)
• சாறிப் பெட்டிகள்
No: 294, Wolfendhal Street, Colombo 13. Tel. 0779113956


## Personalization Examples

கீழுள்ள படத்தினை அவதானித்தால் 3 படங்களிலும்
Create your Start Page,
My MSN,
My Yahoo
எனப் personalization இற்காக Links ஐ அமைத்துள்ளதைக் காணமுடியும்.

## Conclusions

• Personalization ஆனது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைக் காலம் முழுவதும் அவர்களுடனான உறவைப் பலப்படுத்தும் ஒரு சிறந்த tool ஆகவுள்ளது.
• வித்தியாசமான Products ஐயும் வாடிக்கையாளர்களின் தரத்தையும் இந்த Personalization சிறப்பாகக் கையாள்கிறது.
• சரியாகத் தயாரித்து பராமரித்து வந்தால் Personalization ஆனது செலவு கூடிய ஒன்றாகும்.


அனைத்து வகை printing தேவைகளுக்கும்
No: 294, Wolfendhal Street, Colombo 13.
Tel. 0779113956






T-Shirt & Cap Printing
உங்கள் நிறுவனம்
தனித்துவமானது என்பதை
அறியப்படுத்துங்கள்
Hotline: 011 720 8979



ATA Aspirations
No. 122/B, Galle Road, Dehiwala South, Colombo, Sri Lanka.
Tel: 011.720 7989 Hotline: 077 5016757, 077 2 46 46 84
Email: info@ataaspirations.com Web: www.ataaspirations.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தை வளர்ச்சியில் பெற்றோர்

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராதும் தியவராவதும் அன்னை வளர்ப்பிலே"**

அதாவது ஒருவர் பிறக்கும் போதே நல்லவராகவோ கெட்டவராகவோ பிறப்பதில்லை. அவர் வளர்க்கப்படும் விதத்திலேயே நல்லவராகவோ கெட்டவராகவோ மாற்றப்படுகிறார்.நல்ல குழந்தையை உருவாக்குவதில் தாய்க்கு மட்டுமல்ல தந்தைக்கும் பங்குண்டு.ஒரு குழந்தையைச் சிறந்த முறையில் வளர்த்தெடுப்பது தாயினதும் தந்தையினதும் கடமையாகும். இதனால்தான் ஒரு குழந்தையின் ஆன்மீக ஆசிரியர்களென (Spritual Teacher) தாய் தந்தை இருவருமே குறிப்பிடப்படுகின்றனர். ஒரு மனிதனின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற காலப்பகுதி குழந்தைப் பருவமாகும். எனவே இப.பருவத்தில் குழந்தையைச் சிறப்பாக வளர்த்தெடுக் -கவேண்டிய பொறுப்பு முழுக்க முழுக்க குழந்தையின் பெற்றோரைச் சார்ந்ததாகவே இருக்கிறது. பல பெற்றோர்கள் ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டால் மட்டும் போதும் எனத் தவறாக எண்ணுகிறார்கள். அந்தக் குழந்தையை உளஆரோக்கியம் மிக்க குழந்தையாக நல்லொழுக்கம் மிக்க குழந்தையாக எவ்வாறு வளர்த்தெடுக்க வேண்டும் என்ற அறிவு அவர்களிடம் இருப்பதில்லை. ஆரோக்கியம் மிக்க ஒழுக்கம் மிக்க குழந்தையை வளர்த்தெடுப்பதற்கு பெற்றோர் பின்வருவனவற்றைக் கடைப்பிடித்தல் மிகவும் பயனுடையதாக அமையும்.

## பெற்றோர் குழந்தைகளிடத்து அன்பும் அக்கறையான கவனிப்பும் கொண்டு நடத்தல் வேண்டும்.

குழந்தையில் நல்ல உணர்வுகள் வளர்வதற்குப் பெற்றோரினதும் குடும்பத்தினரதும் அன்பு அவசியானது. குழந்தைகள் தமது தேவைகள் உணர்வுகள் என்பனவற்றை வெளிப்படுத்தும் போது பெற்றோர் அதை உணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாதுவிடின் குழந்தையின் சமூக வளர்ச்சி(Social Development) தாமதமடையும். இதன் காரணமாக குழந்தை எதிலும் ஈடுபாடின்றித் தனது ஆர்வங்களை வெனிப்படுத்தாது அமைதியாக இருக்கும். குழந்தைப் பருவம் முதல் வாலிபப்பருவம் வரை பிள்ளைகளுக்கு பெற்றோரிடமிருந்து அன்பு கிடைப்பது அவசியமாகின்றது. தமது வாழ்க்கையில் அவர்கள் தன்னம்பிக்கையுடன் வளரவும் மற்றவர்களுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் புதிய அனுபவங்களுக்கு முகங் கொடுப்பதற்கும் அன்போடு கலந்த அரவணைப்பு அவசியமானது. இத்தகைய அன்பும் அரவணைப்பும் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். இத்தகைய அன்பு சடுதியாக முறிவுற்றால் பிள்ளைகளில் மன அழுத்தம் நெருக்கீடு போன்ற மனப்பாதிப்புகள் ஏற்படும். இது அவர்களின் ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கும். பெற்றோர் குழந்தைகளின் மீது காட்டும் வெறுப்பு அவர்கள் தம்மையொத்த குழந்தைகளுடன் பழகும்போதும் பிரதிபலித்துப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். ஏனெனில் அவர்களில் கோப உணர்ச்சி வெறுப்புணர்ச்சி என்பன காணப்படுவதனால் மற்றக் குழந்தைகளுடன் இவர்களால் ஒத்துப் போக முடிவதில்லை. இதனால் ஏற்படும் மனக் காயங்கள் குழந்தையின் ஆளுமையைப் பாதிப்பதாக அமையும். எனவே இவற்றையுணர்ந்து பெற்றோர் தமது குழந்தைகளை அன்புடன் வளர்க்க வேண்டும். பிள்ளைகளிடம் அன்பு காட்டுவது மட்டுமன்றி காட்டும் அன்பை பிள்ளைகள் உணர்ந்துகொள்ளும்படி காட்டவேண்டும்.

## (பெற்றோர்) தாய் தந்தையர் தங்களுக்கிடையே தொடர்பு கொள்ளும் விதம் நேர்த்தியானதாய் இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் ஒழுக்க வளர்ச்சி தாய் தந்தையர் தம்மிடையே உறவு நிலைகளை எவ்வாறு பேணிக் கொள்கிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது. தந்தை தாயுடனும் தாய் தந்தையுடனும் தொடர்பு கொள்ளும் விதம் பெற்றோர் ஏனைய சகோதரர்களுடன் தொடர்பு கொள்ளும் விதம் உறவாகும் விதம் என்பனவும் குழந்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலில் தந்தை தாய் இருவரும் ஒருவரில் ஒருவர் மதிப்பும் அன்பும் வைத்திருத்தல் வேண்டும். அவர்கள் தமக்கிடையில் சுமுகமான உறவு நிலைகளைப் பேணிக் கொள்ளல் வேண்டும். பெற்றோர் எந்த நேரமும் சண்டைபிடித்தபடி இருந்தால் அது குழந்தையின் நடத்தையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். மிக முக்கியமாகப் பெற்றோர் குழந்தைகளின் முன்னால் சண்டை பிடித்தலையோ தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதையோ தவிர்க்க வேண்டும்.

## பெற்றோர் சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும்.

குழந்தைகள் போலச் செய்தல் அல்லது பின்பற்றுவதனூடாக (imitation) பலவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். அதாவது அவதானிப்பதினூடாக கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களைச் சுற்றி நடப்பதை மட்டுமன்றி தங்களைச் சுற்றியுள்ளவர்கள் கதைப்பதைக் கூட கவனிக்கிறார்கள். குழந்தைகளுக்கு நல்லது கெட்டது என்ற வித்தியாசம் எதுவும் தெரிவதில்லை. குழந்தைகள் பிறக்கும்போது அவர்களது மனது எழுதப்படாத வெள்ளைத்தாள் போன்று மிகத் தூய்மையாகவே இருக்கின்றது. தினம் தினம் அவர்கள் பார்க்கும் காட்சிகளாலும் கேட்கும் கதைகளாலும் பெற்றுக் கொள்கின்றன. அனுபவங்களாலும் அது நிறைகின்றது. அவை நல்லதாக இருந்தால் நல்லவை பதியப்படுகின்றன.



K. Gauthaman
B.A(Hons in.Psychology)
Jaffna Dist.Psychological Coordinator
Visiting Lecturer (Psychology) University of Jaffna


20 ஆம் பக்கம் பார்க்க....



www.ataaspirations.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதத்தின் நுட்பங்கள்

கணிதத்திலுள்ள சில இலகுவான கணித்தல் முறைகளை அலை ஓசை ஊடாக எமது மாணவச்செல்வங்களுக்குத் தருவதில் அலை ஓசையானது பெரு மகிழ்ச்சியடைகிறது. இவ் நுட்பங்களானது எல்லா இலக்கங்களுக்கும் பொருத்தமற்றதாக இருப்பினும் பெரும்பாலான இலக்கங்களுக்குப் பயன்படுத்தக்கூடியதாகவுள்ளது. உதாரணங்கள் மூலம் இவ் நுட்பங்களை விளங்கிக்கொள்வது இலகுவானதென்பதால் அம்முறையையே இங்கும் பயன்படுத்தியுள்ளேன்.




நுட்பம் 1

108 X 109 இன் பெறுமதியைக் காண பின்வரும் முறையைப் பயன்படுத்தலாம். 108 இலுள்ள 100 இற்கு மேலதிகமாக உள்ள 8 இனை மற்றைய இலக்கமான 109 உடன் கூட்டிக் கொள்ளுங்கள். ( 8 + 109 = 117) மற்றைய பக்கம் இரு இலக்கங்களிலும் மேலதிகமாக உள்ள 8 இனையும் 9 இனையும் பெருக்கி வைத்துக்கொள்ளுங்கள். (8 X 9 = 72) இறுதி விடையானது 117 இனையும் 72 இனையும் இணைத்து எழுத வரும் 11772 ஆக இருக்கும்

மேலதிக உதாரணங்கள்

108 X 108 = (108 + 8)|( 8 X 8)
= 116|64
= 11664

103 X 105 = (3 + 105)|(3 X 5)
= 108|15
= 10815




## கூட்டல் விருத்தியில் ஒரு வினா விடை காண முயலுங்கள்

ஒரு கூட்டல் விருத்தியின் 11 ஆம் உறுப்பு 15 ஆகும். 21 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண முடியுமா?

உதவிக்குறிப்பு : ஒரு கூட்டல் விருத்தியின் n ஆம் உறுப்பு Tn = a+(n-1)d ஆகவும் n உறுப்புக்களின் கூட்டுத் தொகை Sn = n/2{2a +(n-1)d} ஆகவும் உள்ளது.

விடை : 315




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# TIER 4 (CHILD) STUDENT



UK இற்கான Student Visa வகைகளில் பிள்ளைகளுடன் பெற்றோரும் UK செல்லக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பம் தான் இந்த Tier 4(Child) Student வகையாகும். UK இலுள்ள independent fee paying schools இல் கற்க விரும்பும் 4 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கான இந்த வகை Visa விற்குரிய தெளிவான விளக்கங்களை எமது மாணவர்களுக்காக இங்கே தருகிறோம்.

### 1. Tier 4(Child) Student விசா என்றால் என்ன?

UK இலுள்ள independent fee paying Schools இல் மட்டும் கற்கக்கூடிய 4 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கான விசா நடைமுறையே இந்த Tier 4(Child) Student விசா எனப்படுகிறது.

### 2. சாதாரண Student விசா நடைமுறைக்கும் இந்த Tier 4(Child) Student விசா நடைமுறைக்குமான வேறுபாடு என்ன?

ஆங்கிலத் தேவை இன்றி (IELTS,City and Guilds,PTE,TOEFL,...இன்றி) மாணவர்களுடன் பெற்றோரும் செல்லக்கூடிய சந்தர்ப்பம் இந்த Tier 4(Child) Student விசா நடைமுறையில் மட்டுமே உள்ளது.

### 3. இந்த வகை மாணவர்கள் தமது பெற்றோரை தம்முடன் அழைத்துச் செல்வது பற்றித் தெளிவாகக் கூற முடியுமா?

12 வயதிற்கு உட்பட்ட இந்த Tier 4 (Child) Students தம்முடன் தமது பெற்றோரையோ அல்லது சட்டரீதியான பாதுகாவலரையோ தம்முடன் Special Visitor ஆக அழைத்துச்செல்ல முடியும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கூட இந்த விசா நடைமுறையின் கீழ் ஒரே தடைவையில் செல்ல முடியும்.

### 4. இந்த Tier 4 (Child) Students மாணவர்களுக்கு எவ்வளவு காலத்திற்கான விசா வழங்கப்படுகிறது?

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு ஆகக்கூடியது 6 வருடங்களும் 4 மாதங்களும், 16 அல்லது 17 வயது மாணவர்களுக்கு ஆகக்கூடியது 3 வருடங்களும் 4 மாதங்களுக்குமான விசா வழங்கப்படுகிறது. மேலும் இந்த மாணவர்கள் தமது பாடநெறி ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே UK செல்ல முடியும்.

### 5. இந்த Tier 4 (Child) Students மாணவர்களுக்கான செலவுகள் பற்றிக் கூற முடியுமா?


அவர்களின் பாடநெறியின் முதல் வருடத்திற்கான course fee உம் அவர்களின் அவ்வருடத்திற்கான வாழ்க்கைச்செலவுமே அவர்களுக்குரிய

22 ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழில்நுட்ப உலகிற்கு உங்களை நாங்கள் அழைக்கிறோம்....



மிகப்பெரும் தொழில்நுட்ப மாற்றத்திற்குள்ளாகிவரும் இவ் உலகில் விரும்பியோ விரும்பாமலோ நீங்களும் உங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளீர்கள் என்பதை நாம் இங்கு குறிப்பிட்டுத்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. ஆனால் உங்கள் மாற்றத்தை நாம் இலகுவாக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நாங்கள் இங்கு குறிப்பிட்டு கூற விரும்புகின்றோம்.




NALIN Information

Toner House

195/4, Parameswara Junction, Palaly Rd, Thirunelvely, Jaffna, Sri Lanka.
Tel: 0094 21 222 1166, 0777 667 974
Email: nalinprice@gmail.com

hp ASUS POWERLOGIC Canon LITEON Microsoft SONY SONICGEAR SAMSUNG intel ViewSonic

**HOTLINE: 0777 667 974**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியுமா ஆண்கள்



> " **இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி** அரசியலையும் நல்லவற்றையும் எழுதி வந்த நாழிதழ்களில் இன்று ஒரு படி மேலாக கொலை, தற்கொலை என்பன சேர்ந்து எழுதப்படுகின்றன. ஏன் இந்த நிலைமை? ஏன் இந்த மாற்றம்? "
>
> **உங்கள் நிழல்**

சங்க காலத்தில் புனிதமான வார்த்தையாக கருதப்பட்டு வந்த காதல் இன்றைய இளைஞர்களின் செயற்பாட்டால் காதை மூடும் அளவிற்கு மாற்றப்பட்டு விட்டது. ஏன்? காலத்தின் பிழையா? மனிதர்களின் பிழையா? இவ்வாறான நிலையில் சமுதாயத்தின் இந்த பின்னணியில் ஆண்களின் பங்கு எவ்வாறு எனப் பார்ப்போமாயின், Teenage இல் ஆரம்பமாகிறது சிலரது சிக்கல். ஆண்பிள்ளைகளில் பலர் தமது படிப்பில் முழு அக்கறை செலுத்தி தீவிரமாகப்படித்து நல்ல பெறுபேற்றை ஈட்டுபவர்களும் உள்ளர். சிலர் விளையாட்டுத்துறை, கலைத்துறை எனத் தமது துறைகளில் கவனத்தினை செலுத்தி வாழ்க்கையில் முன்னுக்கு வரத்துடிப்பார்கள். இவை எல்லாவற்றிலும் அக்கறையில்லாது வீணே குழப்பும் குறும்புக்காரர்களைப்பார்த்தால் 13, 14 வயதுகளிலேயே தமது சக வகுப்பு மாணவிகளின் பின்னே சென்று அவர்களையும் குழப்பித் தாமும் படிக்காது வீணே பெற்றோரினது பணத்தினை செலவு செய்து தமது நண்பர்கள் வட்டத்தினையும் அதிகரிப்பதிலேயே குறிப்பாக இருப்பார்கள்..

ஓரிரு பெண்களின் பின்னே சென்றால் போதாதுதென்று, போய் வரும் எல்லோரது கவனத்தினையும் சிதைத்து பரீட்சைக்காலத்தில் கோட்டை விட்ட பின்னர் சில தீய பழக்கங்களிற்கும் அடிமையாகி விடுவார்கள். அவர்களது கவனம் அலை பாய்ந்து ஏதோவொரு கெட்ட பழக்கத்தினை கெட்டியாகப் பிடித்து விடுவார்கள். அது அவர்களை ஆயுள் வரை துன்புறுத்திக் கொண்டே இருக்கும். சிலர் Teenage முடிவில் இதிலிருந்து விடுபட்டாலும் பலரால் முடிவதில்லை.

ஒருவாறு பல்கலைக்கழகப் படிப்பினைப் பெற்றவர்களைப் பார்த்தால் குடும்பக்கஸ்டத்தில் படிக்க வந்தவர்கள் அந்தக்காலத்தை பிரயோசனமாய் பாவித்து படிப்பில் கவனத்தினைச் செலுத்துவார்கள். படிக்கவேண்டும் என்ற இலட்சியம் உள்ளவர்களைப்பற்றியும் சொல்லத்தேவையில்லை. புதுமுக மாணவர்களாக நுழையும்போது தமது Seniors பழக்கும் சில கெட்ட பழக்கம் (சிகரெட், குடி) பழகிப் பெற்றோரை விட்டு பிரிந்திருக்கும் போது அவர்களது கட்டுக்கோப்பிலிருந்து விலகி இதையும் பழகுவார்கள்.

சில ஆண்பிள்ளைகள் படிக்கக்கூடிய பெண்பிள்ளைகளுடன் இணைந்து தாமும் படித்து Note Book, Reference Book என்று எழுதிக்கொடுத்து மாறிப்படிப்பார்கள். சில ஆண்பிள்ளைகள் பெண் சகோதரர்களுடன் பிறந்தவர்களாகவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆங்காங்கே கூட்டமாக நின்று போகும் பெண் பிள்ளைகளைக் கேலி செய்யும் பழக்கமும் உண்டு. இந்த வயதினர் தான் கூடுதலாக தடை செய்யப்பட்ட படங்களைப்பார்க்க ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள். ஏன் தான் தடை செய்யப்பட்ட படங்களினை தயாரிக்கின்றார்கள்? இலாபம் உழைக்கும் நோக்கமா?, சமுதாயத்தினைச் சீரளிக்கும் நோக்கமா?

இவ்விடத்தில் சினிமாவைப்பற்றி நான் சிறிது கூறுவது சமுதாயத்திற்கு நன்மையானதொன்று. நான் முன்னர் கூறியது போல் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி இலக்கியம் Media எந்தத் தொடர்புசாதனமாக இருந்தாலும் அது சமுதாயத்தினை திருத்துவதாக சமுதாயத்திற்கு நல்ல கருத்தினை சொல்வதாக இருக்க வேண்டும். இந்தத் தொடர்பு சாதனங்களிற்கு சமுதாயத்தினைக்கட்டி எழுப்பும் பாரிய பொறுப்புண்டு. ஆனால் இன்றைய தொடர்பு சாதனங்கள் தமக்கு எழுதும் ஆற்றல், படைக்கும் ஆற்றல் இருக்கென்ற சிந்தனையில் சமுதாயத்தினைப்பற்றிச் சிந்திக்காது தமது படைப்பினை மேற்கொள்கின்றனர். எல்லா Media க்களும் இல்லை சில மட்டும்தான். ஆனால் இன்றைய சினிமாவைப் பார்த்தால் அதில் இந்த சமுதாயத்திற்கு

## கடி ஜோக்

நீண்ட நாள் உயிரேடுவாழ என்னவழி?
வேறென்ன சாகாமல் இருப்பதுதான்

வாழ்கையில் வழுக்கி விழுந்தவர்களுக்கு நீங்கள் என்ன சொல் விரும்புகிறீர்கள்?
இனிமேலாவது ஜாக்கிரதயாக நடந்து போங்க

காகம் ஏன் தண்ணீரில் மூழ்குவதில்லை?
ஆ கரையுமே

டைப்ரைட்டர் மிஷின் பெண்பால் எப்படி?
ரிப்பன் கட்டியிருக்கே!




www.ataaspirations.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நல்ல கருத்துக்கள் இருப்பதாகத் தெரிவதில்லை. மாறாக சினிமா நட்சத்திரங்களில் ஒரு பெண் தான் மறைக்கவேண்டுமென்ற பகுதிகளைக்கூட காட்டியும் காட்டாது பிற பெண்களை சங்கடத்திற்குள்ளாக்கி இளைஞர்களின் சிந்தனையை சிதறடிப்பதாக இருக்கின்றது. பல இளைஞர்கள் இதையெல்லாம் பெரிதுபடுத்தாது தமது கவனத்தினை தமது நோக்கத்தில் முழுமுதலாகச் செலுத்துவார்கள்.பாவம் சில அப்பாவி இளைஞர்கள் மட்டும் இது ஏதோ உலக மகா விடயம் என்றெண்ணி பரந்துபட்ட உலகத்தில் பல அரிய விடயங்கள் உள்ளன என்பதனை மறந்து இதைப்பற்றி சிந்தித்து சில வன்செயல்களில் ஈடுபடவும் தயாராக இருக்கிறார்கள்.

இது உண்மைச்சம்பவம் "அலைஓசை" போன்று வெளிவரும் இன்னொரு சஞ்சிகை, அதன் அட்டைப்படம் சிந்தனையைத் தூண்டுவதாக வித்தியாசமான படைப்பில் உருவாகியிருந்தது. அதனைப்பார்த்த அந்த அட்டைப்படம் சொல்ல வந்த விடயம் என்ன? அதில் பிரயோகித்த நுட்பம் என்ன என்று யோசிக்கின்றார்களா இல்லை அதன் சமுதாய விளைவைப்பற்றி சிந்திக்கின்றார்களா? இல்லை.

இவ்வாறு இளைஞர்களின் மனதினைச் சிதைப்பதாக தமது வருமான மட்டத்தினை மட்டும் குறியாகக்கொண்ட மடத்தயாரிப்பாளர்கள், Studio, Designers தமது அறிவு நுட்பத்தினை தமது துறையிலேயே தூரநோக்கம் கொண்டு நுட்பஆற்றலை விருத்திசெய்து தமது துறையை விருத்தி செய்ய வேண்டும். பாவம் பல இளைஞர்கள் இந்த சினிமா நட்சத்திரங்களின் படங்களினால் தமது தனி அறைகளைக் கூட அலங்கரித்திருப்பார்கள்.
இப்படி இருக்கும் இளைஞர்கள் அடுத்த கட்டமாக வேலை செய்யும் இடம் குடும்பப் பொறுப்புள்ளவர்களாக மாறும்போது ஆகும். குடும்பப் பொறுப்பினை ஏற்ற ஆண் என்றாலே தியாகம் (Scarifies) என்பார்கள்.



பிரபல ஆண் வர்த்தகர் ஒருவர் கூறினார் "என்ன இது O/L, A/L Science Book மாதிரி இருக்கின்றது" என்று. இக்கூற்று என் மனதினை ஆழமாகத் தைத்திருந்தது. ஏன் இவர்களின் சிந்தனை எல்லாம் இப்படியிருக்கிறது. கவர்ச்சியாக ஒரு பெண் அரையும் குறையுமாக இருக்கவில்லை என்பதுதான் அவரது ஆதங்கம் இவர்கள் சிந்தனை இப்படியாயின், இருந்து தமது வர்த்தகம் மட்டுமே அவர்களிற்கு குறி.

அதாவது பார்ப்பவர் கவனத்தினை ஈர்த்து தமது Business நன்றாகப்போனால் சரி அவர்களிற்கு சமுதாய அக்கறையில்லை. தனது குடும்பத்தினைப் பாதுகாப்பது கஸ்டங்களினை தனது தோளில் சுமந்து தனது குடும்பத்திற்குத் தூணாக இருந்து பாதுகாக்கும் இலட்சியப் புருசன் ஆகின்றான். சிலர் இராமனைப்போன்று ஏகபத்தினி விரதனாக இருப்பதில்லை. இந்த Middle Age வயது தான் இந்த விடயங்களில் குழப்பமுள்ள வயதாகின்றது. அந்தந்த வயதில் அவ்வயதிற்குரிய நடவடிக்கையும் துடுக்குத்தனமும் அனுபவிக்காதவர்களிற்கு குழப்பமான வயதாகின்றது. தனது மனைவி பிள்ளைகளுடன் செலவிடும் நேரத்தினை விட பிறருடன் செலவழிப்பதில் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.
ஓர் அழகான பெண்ணுடன் கதைப்பது என்றாலே எல்லா வயது ஆண்களுக்கும் பிடித்தமானதொன்று. (Exception உண்டு) குடும்ப வயதினரில் சிலர் இதனைப் பிழையான சிந்தனையில் கொண்டு செல்வதும் உண்டு. ஏன் சில அலுவலகங்களில் ஒரு திறமையான பெண்ணுக்கு ஒரு நல்ல ஆண் அதிகாரி யின் கீழ் வேலை கிடைத்து அந்த ஆண் அதிகாரியும் அந்தப் பெண்ணும் நல்லவர்களாக இருந்தும் தப்பாகக் கதைக்கின்றனரே ஏன்? சில பிழையான நேர்முகத் தேர்வுகள் பிழையான ஆண்களின நடத்தைகள் பிழையான சிந்தனை பிழையான நோக்கம் இவையே இதற்குக் காரணமாகின்றது. பெரிய பதவிகளில் உள்ள ஆண்களில் பலர் பல தவறான Promotion செய்த பெண்களும் உளர். இவர்கள் மனைவிக்குத் துரோகம் செய்வதாக நினைப்பதில்லை. இவ்வாறு கிளை தாவுபவர்கள் அந்தக்கிளையிலும் நிரந்தரமாக இருக்க மாட்டார்கள்.

சில நாடுகளில் தந்தை தனது விபரம் தெரியாத பெண்ணினை தவறாக வழி நடத்தியதும் உண்டு அதுவும் ஒரு ஆண்தான். எமது நாட்டிலும் வெளிச்சத்திற்கு வராத இவ்வாறான பல விடயங்களும் உண்டு.
பெண்ணினைத்தாயாக, தோழியாக, சகோதரியாக பொறுப்பு வாய்ந்த நிலையில் இருந்து சிந்திக்கும் ஆண்கள் மிகச்சிலராகவே இருக்கின்றனர். முதுமைப்பருவத்திலிருக்கும் ஆண்கள் கோயில், தொண்டு, சேவை, பேரன்பேத்திகளுடன் நேரத்தினை செலவு செய்பவர்களினை விட மிகவும் சொற்பமான சிலர் தவறான வழியில் செல்வதுண்டு.

எனவே எவ்வயது ஆண்களாக இருந்தாலும் சிந்தனையில் வைக்க வேண்டிய விடயம் என்னவெனில் சமுதாயம் என்னும் பெரிய அகன்ற குடும்பக் கட்டமைப்பு உன்னுடையதென்றெண்ணி அதனைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு உங்களிடமுள்ளது. சிறந்த மனிதர்களை நினைத்துப்பாருங்கள் காந்தி, Plato, Karlmarks, Nelson Mardela, Alexander the great King, Abraham Lingon, சமயத்தலைவர்கள், தத்துவ ஞானிகள் பெரியவர்களாக உங்கள் வாழ்க்கையில் அதனை நோக்கி அந்த அளவிற்கு சமூக இலட்சியம் இல்லா விடினும் உங்கள் குடும்பத்திற்காக சமுதாய விழிப்புடன் செயற்படுங்கள். நீ வளர, நீ திருந்த சமதாயம் திருந்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி பாதுகாப்பு விதிகளும் வீதியினைப் பாவிப்பவர்கள் விடும் தவறுகளும்

"To arrive a little late than not to arrive at all" ஏற்கனவே நீங்கள் தாமதமாகி விட்டீர்களா? குறித்த இடத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி சொல்லுங்கள் நீங்கள் வந்தடைய தாமதமாகும் என்று, சிறிய தாமதத்தினை நினைத்துப் பெரிய தாமதமான செலவான உயிரிழப்பினையே ஏற்படுத்தக்கூடிய விபத்திற்கு உட்படாதீர்கள். நீங்கள் கோபமாகவோ பரபரப்பாகவோ உள்ள சந்தர்ப்பத்தில் வாகனத்தினை செலுத்துவதனைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். இந்த மனநிலை வாகனத்தின் Accelerator ஐ மிக வேகமாக அழுத்தத் தூண்டும். வேகமாக செலுத்தும் வாகனச் சாரதிக்கு பொறுத்திருத்தல் காத்திருத்தல் மிகக் கடினமானதாக இருப்பதனால் Overtaking இனைக் கூட வீதி ஒழுங்கு விதிகளுக்கு முரணாக ஏற்படுத்தி விபத்துக்கள் மட்டுமன்றி பிற வாகன சாரதிகள் மற்றைய தெருப்பாவனையாளர்களிற்கும் இடையூறாக அமையும். எனவே இந்த கோபம் பரபரப்பினை சாதாரண மனநிலைக்குக் கொண்டு வருவதற்கு 10 தடைவைகள் மூச்சினை ஆழமாக உள்ளிழுத்து வெளியே விடுவதன் மூலம் இந்த மன அழுத்தம் சாதாரண நிலைக்கு வந்ததும் வாகனத்தினைச் செலுத்துவது உங்களிற்கும் பிற Road Users இற்கும் உதவியாக இருக்கும். வேகமாக வாகனத்தினை செலுத்தி Overtake செய்பவர்களிற்காக இதோ சில அறிவுரைகள்:



அலை ஓசை
Online இல் பார்வையிட
www.ataaspirations.com



Image 2



Image 2




## Overtake தவிர்க்கப்பட வேண்டிய இடங்கள்

• உயரமான பகுதியில் ஏறும்போதும் இறங்கும்போதும்
(Hills,Dips and Bridges)
• வளைவுகளில்
(Bend or Corner) Imge [1]
• ஒடுங்கலான வீதிகளில்
(Narrow road)
• பாதசாரிகள் கடைவைகளில்
(Pedestrian Crossing,Pellican Crossing, Zebra Crossing)
• வீதி அடையாளங்களும் குறிப்புகளும் உள்ள இடங்களில்
(Road signs and Markings)

வீதியின் சரி நடுவில் வெள்ளை நிறத்தில் போடப்படும் கோடு இது சில சமயம் மஞ்சள் நிறத்திலும் இருக்கலாம் சில நாடுகளில் வெளிர் சிவப்பு நிறத்திலும் இருக்கலாம். இந்தக் கோடு தொடர்ச்சியான கோடாகவோ அல்லது Dot Dot கோடாகவோ இருக்கலாம். (Continues line,Broken Line,Single Line,Double white Line) தனித்து ஒரு Line or இரண்டு Line ஆகவும் இருக்கலாம்.

• பாடசாலைக்கு அண்மைய வீதிகளில் குறிப்பாக பாடசாலை தொடங்கும் முடியும் நேரங்களில்.
• பெரிய நெருக்கடி மிகுந்த சந்திகளில் (Junctions) Image [2]
• பாதசாரிகள் கடைவையில் பாதசாரிகள் தெருவினைக் கடப்பதற்காக காத்திருக்கும் சந்தர்ப்பத்தில் நீங்களும் உங்கள் வாகனத்தினை நிறுத்தத் தயாராக வேண்டும்.

ஆனால் இங்கு பெரும்பாலானோர் பாதசாரிகள் கடப்பதற்கான சந்தர்ப்பத்தினை அவர்களிற்குக் கொடுக்காது வாகனத்தினை அந்த இடத்தில் வேகமாக செலுத்துவார்கள். அதாவது பாதசாரி தெருவினைக் கடக்க முன்னர் எமது வாகனம் அந்த Crossing இனைக் கடக்க வேண்டும் என்று இது மிகவும் பிழையான ஒன்று.
பாதசாரிகள் கடைவையில் ஒரு பாதசாரி தெருவினைக் கடப்பதற்காக காத்திருந்தால் கூட அந்த இடத்தில் முதல் சந்தர்ப்பம் பாதசாரிக்குத்தான். அவரை அந்த Pedestrian Crossing இனைக் கடக்க அனுமதித்த பின்னரே நாம் வாகனத்தினை எடுக்க வேண்டும். மிகத்தூரத்தில் வரும் போதே அந்த Pedestrian Crossing இல் பாதசாரிகள் காத்திருக்கின்றார்கள் ஆயின் உங்கள் வாகனத்தினை நிறுத்தத் தயாராக வேண்டும். அந்த Crossing இல் Signal Light அல்லது Traffic Police இருப்பின் அவற்றின் அறிவுறுத்தல் படி செல்ல வேண்டும். நமது வாகனச்சாரதிகள் Pedestrian Crossing இல் வாகனத்தினை நிறுத்தாததுடன் மட்டுமன்றி Horn மூலம் சத்தத்தினை ஏற்படுத்தி அல்லது head Light இனை Flash செய்து Cross செய்யாதே நான் வருகிறேன் என்று சொல்வார்கள் ஏன் தான் இந்த மனநிலை? எல்லோருக்கும் அவசரம் தான் தெருவில் வாகனம் ஓட்டுவது என்பது பொறுப்பானதொன்று. சுயநலத்தை விட்டு அது எனது விடயம் சம்பந்தப்பட்டது மட்டுமன்றி பிற Passengers,Road Users உடன் தொடர்புபட்டது என்பதை மனதில் வைத்து Road Rules இனை பின்பற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• வீதியில் "No Overtaking" அடையாளம் இருக்குமாயின் அந்த அடையாளம் அவ்வளவு தூரத்திற்கு அல்லது சிறிது தூரத்திற்கு அப்பால் Overtaking Allowed என்ற அடையாளம் வரும் வரை அதனைப் பின்பற்ற வேண்டும். நாம் Overtaking இனை மேற்கொள்ள முனையும் சந்தர்ப்பத்தில் தெருவில் எவ்வாறான சந்தர்ப்பத்தில் அதனை மேற்கொள்வது உசிதம் எனப்பார்க்கும் போது:

1. Overtaking இனை மேற்கொள்ள முன்னர் நமது பக்கத்திற்கு எதிர்ப்புறமாக வரும் வாகனங்களின் தூரம் போதுமா-னதா Image [3] (நாம் எமக்கு முன் இருக்கும் வாகனத்தினைக் கடந்த பின்னரே அந்த வாகனம் எம்மை நெருங்கும் சந்தர்ப்பம் அல்லது தூரம் போதுமானது) என்று உறுதி செய்ய வேண்டும் பின்னர் எமது எல்லா Mirrors மூலமும் எமது பார்வையை உறுதிப்படுத்த வேண்டும் (Interior Mirror and Right side Mirror) உறுதி செய்த பின்னர் இந்த Mirrors இன் காட்சிக்குள் வராத பகுதிகளினை நாம் நேரடியாகப்பார்த்து. (இந்த Blind Spot இற்குள் வரக்கூடியவர்கள் Cyclist, Motorcyclist) இதனை உறுதி செய்த பின்னர் எந்த வாகனமும் எமக்குப் பின்னால் அண்மித்து இல்லை என்பதனையும் உறுதி செய்த பின்னர் வலப்பக்க Signal இனைப் போட்டு எமது வாகனத்தினை தெருவின் வலப்பக்கமாக திருப்பி நடுவில் கொண்டு வந்து சீரான வேகத்தில் முன்னர் செல்லும் வாகனத்தினை கடக்க வேண்டும். இவ்வாறு கடக்கும் சந்தர்ப்பத்தில் அவசியமின்றி வேகத்தினைக் குறைப்பதோ break இனைப் பாவிப்பதனையோ தவிர்க்க வேண்டும். இவ்வாறு முதல் வாகனத்தினைக் கடந்ததும் மீண்டும் பழையபடி அந்த Road இல் எமது பக்கத்திற்கு (Left Side) இற்கு வர முன்னர் பின்னுக்கு வரும் வாகனத்திற்கு இடையூறின்றி (அவரது Speed ஐ குறைக்க ஊக்குவிக்காது) எந்தவித நேர காலதாமதமின்றி இடப்பக்க Signal ஐ போட்டு (அவசியமாயின்) இடப் பக்கமாகவுள்ள Image [4] இடைவெளி Safe ஆனதா போதுமானதா என்று பழைய நிலைக்கு வந்து சீரான வேகத்தில் வாகனத்தைச் செலுத்த வேண்டும். நாம் இவ்வாறு Overtake இனை மேற்கொள்ளும் போது ஒரு போதும் எமக்கு முன்னே செல்லும் வாகனம் Overtake செய்கிறது எனவே நாமும் அந்த வாகனத்தினைத் தொடர்ந்து Overtake செய்ய நினைப்பதும் பிழையான ஒன்றாகும். எமக்கு முன்னே செல்லும் வாகனத்திற்கு Overtake செய்ய அந்த வாகனத்திற்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். அவர் அதனை உறுதி செய்து Overtake செய்வார். அவரின் பின்னே நாம் செல்வதனால் எமக்கு முன்னே முழு view எமக்கு வராது. எனவே ஒருபோதும் இன்னோரு வாகனம் Overtake செய்வதனை நாமும் தொடர்ந்து செல்லக்கூடாது.

2. ஒரு வாகனத்தினை நாம் Overtake செய்யும்போது எமது இடப்புறமிருக்கும் வாகனத்திற்கு மிக அண்மித்ததாக அதற்கு மிக அருகாக கடக்கக்கூடாது. (எந்த வாகனத்திற்கும் அருகிலோ முன்னாலோ அல்லது பின்னாலோ ஒரு இடைவெளியினை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.) Not Get Too Close.

3. உங்கள் வாகனத்தினைக் கடந்து இன்னோர் வாகனம் செல்கின்றதாயின் உங்களால் அந்த வாகனத்திற்கு இடம் விட முடியுமாயின் மட்டும் உங்கள் பாதுகாப்பினை உறுதி செய்து கொண்டு இடதுபுறம் வாகனத்தினை செலுத்தி உறுதி செய்யலாம். உங்களது வாகனத்தினை இன்னோர் வாகனம் Overtake செய்கின்றதாயின் நீங்கள் கவனமாக இருக்க வேண்டிய விடயம் Overtake செய்யும் வாகனம் திடீரென உங்கள் வாகனத்தின் முன் Cross செய்து வரக்கூடிய நிலைமை உண்டு. (Too Close) அதற்கேற்றபடி நீங்கள் உங்கள் வாகனத்திற்கும் அந்த வாகனத்திற்கும் இடையே பொருத்தமான இடைவெளியினைக் கடைப்பிடிக்க வேண்டும்.





Image 3

4. எமது வாகனத்தினை இன்னோர் வாகனம் கடக்கின்றது ஆயின் தொடர்ந்தும் அதே வேகத்தில் செல்ல வேண்டும் நம்மில் சிலருக்கு எமது வாகனத்தினை இன்னோர் வாகனம் Overtake செய்ய முயற்சிக்கின்றது ஆயின் விட்டுக் கொடுக்க மனம் வராது திடீரென தமது வாகனத்தின் வேகத்தினை அதிகரிக்க முயற்சிப்பர் (நான் உனக்கு சளைத்தவன் அல்ல. என்னாலும் வாகனத்தினை செலுத்த முடியும் Driving என்பது





## கடி ஜோக்

காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுகிறார்கள்?
அவங்க "மெய்" மறந்து காதலிக்கிறவங்களாச்சே!

குழந்தை பிறக்காமயிருக்க என்ன செய்யவேண்டும்
ஒன்னும் செய்யக்கூடாது!

ரொம்ப ரிலிஜியஸ் மிருகம் எது?
யானை, என்னா அதற்குத்தானே மதம் பிடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பலரது உயிர் சம்பந்தப்பட்ட விடயம் என்பதனை மறக்க முடியாது) This is not car race ஆகவே Overtake செய்யும் வாகனத்திற்கு முடியுமாயின் இடப்புறம் சென்று இடம் விடுவதுடன் மட்டுமல்லாது எந்நேரமும் உங்கள் வேகத்தினைக் குறைக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். (அந்த வாகனம் உங்கள் உங்கள் முன்னிலையில் Cross செய்யக்கூடும்.)

5. இரவு நேரங்களில் Overtake செய்யும்பொழுது அவதானமாக இருக்க வேண்டும். இரவு நேரங்களில் எமக்கு வாகனங்களிற்கிடையான தூரத்தினைக் கணக்கிட்டு அதற்கேற்ப முடிவெடுத்து Over Take செய்வது தீர்மானித்து Judgment செய்வது கடினமான தொன்றாகும்.

6. சந்திகளில் வீதியின் Traffic இல்லாது Clear ஆக இருக்கும் சந்தர்ப்பத்தில் Traffic Light Red ஆனது Orange ஆக மாறியிருப்பின் நீங்கள் அந்தக் கண நேரத்தில் கடந்து விடலாம் என்றோ, Amber Light இருக்கும்போது இந்த Light மாற மாறுவதற்கான நேரம் போதுமென்று தீர்மானித்து கடப்பது ஆபத்தானதொன்றாகும்.

உங்களது Signal இற்காகக் காத்திருப்பது சிறந்தது ஆகும்.

7. உங்களது வாகனத்தின் முன்னே ஓர் துவிச்சக்கர வண்டி அதனைத் தொடர்ந்து ஒரு roundabout இல் செல்கின்றீர்களாயின் அந்த Round-about இல் இடதுபுறம் (1st Exit or any Exit) திரும்ப உள்ளீர்களாயின் அந்த Cyclist இன் பின்னே சென்று அந்த Cyclist கடந்ததும் பின்னர் சென்று எமது திரும்புகையினை மேற்கொள்வது நன்று. இது Junction இற்கும் பொருந்தும். Cyclist இற்கு முன்னே சென்று மிக அருகாக சென்று Cross செய்வது பிழையானதொன்றாகும். Image [5]

8. நீண்ட வாகனத்தினை Overtake செய்யும் போது மேலதிக கவனம் எடுக்க வேண்டும். Over take எடுத்து உங்கள் Normal Driving Left Position இற்கு வர நேரம் எடுப்பதனால் இந்த மேலதிக கவனம் தேவைப்படுகிறது. அதே நேரத்தில் நீண்ட வாகனங்களிற்கு அண்மையில் குறைந்த இடைவெளி விட்டுச் செல்வதும் பிழையான தொன்றாகும். Image [6] இடைவெளி விட்டுச்செல்லும் போதே நீண்ட வாகனத்தின் Driver இற்கு அவரது Mirror View விற்குள் நீங்கள் வருவீர்கள் அதனால் அவரிற்கு உங்களது Overtaking புலப்படும்.

பொதுவாக நாம் Overtaking செய்வதென்பது வாகனங்களின் வலது புறம் என்பதே. வீதி ஒழுங்கு விதிகளிற்கு அமைவானதாக இருந்த போதும் சில சந்தர்ப்பங்களில் மட்டும் நாம் வாகனங்களின் இடப்புறமாக Overtake செய்து கொள்ளலாம்.
அவ்வாறான சந்தர்ப்பங்கள்:

1. உங்களது வாகனத்தின் முன்னே செல்லும் வாகனம் வலது புறம் திரும்புவதற்காக Signal ஐ போட்டு விட்டு காத்திருக்கும் போது நீங்கள் நேராகவே செல்பவர்களாயின் அந்த சந்தர்ப்பத்தில் இடது புறம் Signal ஐ போட்டு முன்னுள்ள வாகனத்திற்கு இடது புறமாக Overtake செய்யலாம். Image [7]

2. வீதியின் வலது புற lane நீண்ட பெரியதாக இருந்து மெதுவாகச்செல்லும் வாகன நெருக்கடியாக இருக்கும்போது இடப்புறமாக வேகமாக செல்லும் சந்தர்ப்பத்தில் மட்டும் இடது புறமாக Overtake செய்து கொள்ளலாம். பொதுவாக Left Lane நாம் வாகனங்களினைச் செலுத்தும் lane ஆகவும் Right Lane ஆனது Overtake செய்து கொள்ளவும் எமது வலது புற Exit இனை எடுத்துக் கொள்வதற்குமே உகந்ததாக இருக்கின்றது. Overtake Lane உம் Right Lane.

THREE LITTLE WORDS
SLOW DOWN STUPID




Image 6




Image 5





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை டேமியன் அடிகளார்



1. கிளிநொச்சி

**நாட்டு சூழ்நிலை காரணமாக நான் எனது கணவனை இழந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. எனக்கு ஓர் 2 வயது பெண்குழந்தையுமுள்ளது. எனக்கு இப்பொழுது எந்தபிற ஆண்களைப் பார்த்தாலும் பயமாக உள்ளது. முன்னர் தனித்து இயங்கிய நான் இப்பொழுது எதுவும் செய்யமுடியாமலுள்ளது. எந்த பொது இடங்களுக்கோ எங்கும் போக முடியவில்லை. போகவும் மனமில்லை. நான் பழைய மனநிலைக்கு திரும்ப முடியுமா?**

இந்த பயத்திற்கான காரணத்தை நீங்கள் உங்களுக்குள்ளே ஆழமாக இறங்கி ஆராய வேண்டும் இதற்கு பாதுகாப்பின்மை ஒரு காரணமா அல்லது வேறு காரணங்கள் ஏதேனும் உண்டா என்பதை. இயல்பாக கணவனை இழந்த ஒரு தாய்க்கு மனச்சோர்வு ஆட்களை நேருக்குநேர் சந்திக்க முடியாத மனநிலை உருவாகுவது இயல்பு. எவ்வாறு இருப்பினும் இவர்களால் நிச்சயமாக முன்னைய நிலைக்கு திரும்பமுடியும்.

நீங்கள் உங்கள் பிள்ளையை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்ற இலட்சியத்துடனும் ஓர்மத்துடனும் வாழ வேண்டும். வாழ்வில் பற்றின்மை பிடிப்பின்மை என்பதை தவிர்த்து இது ஒரு சிறிய கலக்கமே என்பதை உணர்ந்து முன்னர் செய்தது எங்கு சென்றது என்பதை அறிந்து கலக்கத்தை களைந்து சாதிக்க நினைத்ததை வெற்றிகரமாக சாதிக்க முடியும்.

2. யாழ்ப்பாணம்

**எனக்கு 45 வயது. நான் திருமணம் செய்யும் போது வேலையிலிருந்தேன். இப்போது நான் 4 குழந்தைகளுக்கு அப்பா. வேலையில்லை. நான் நினைத்த செய்த வேலையைத் தவிர வேறு எதுவும் எனக்கு செய்யத் தெரியவில்லை. வீட்டிலிருப்பது முள்ளின் மேலிருப்பது போலிருக்கின்றது. என்ன செய்வது என்றே புரியவில்லை.**

திருமணம் செய்யும் போது இருந்த நல்ல வேலைக்கு என்ன நடந்தது. ஏன் அந்த நல்ல வேலைக்கு போகமுடியாமல் இருந்தது என்பதை முதலில் ஆராய வேண்டும். இது எந்த நேரமும் வலியாக இருப்பதற்கு என்ன காரணம் என்பதை கண்டறிய வேண்டும். சாதரணமாக ஒரு மனிதனில் அவனது ஆற்றல் திறமைகளில் பத்து வீதம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் வேறு வேலை செய்ய தெரியவில்லை என்று கூறுவது பொருத்தமானதல்ல. சரியான முயற்சிகளை எடுத்தால் வெற்றி காணலாம். மனித வாழ்வு பலவித குறை நிறைகளைக் கொண்டதுதான் அதனைச் சரியான முறையில் முயற்சியுடன் மேற்கொண்டால் வீட்டில் மட்டுமல்ல எங்கும் நிறைவான மனத்துடன் வாழலாம்.

3. கந்தர்மடம்

**நான் ஓர் இளம்தாய். நான் பிள்ளைகளிற்கு அடிப்பதில்லை. ஆனால் அவர்களை நெறிப்படுத்துவதற்காக Sweet / Chocolate தருவேன் இதைசெய் or நல்லபிள்ளையாக இரு என்று சொல்லுவதுண்டு. பிள்ளைகளை வளர்க்க இந்த அணுகுமுறை சரியானதா?**

பிள்ளைகளை வளர்ப்பதற்கு அவர்களது அடிப்படைத்தேவைகளாலான உடல் உள தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். இவைதான் பிள்ளைகளை முதிர்ச்சிப்பாதையில் அழைத்துச்செல்லும். Sweet / Chocolate என்பவை தற்காலிக வெகுமதிகளே. அவற்றை பழக்கத்திற்கு கொண்டு வரக்கூடாது. அவர்கள் வெகுமதிகளில் தங்கியிருக்கக்கூடாது. இது அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை இல்லாமல் செய்கிறது. உளவியலில் இரண்டு அணுகுமுறைகள் உண்டு.

1. நல்லதைச் செய்யும் போது வெகுமதி வழங்குதல்
2. பிழை செய்யும் போது தண்டித்தல்

பிழை செய்யும் போது தண்டித்தல் என்பது அவர்களுக்கு அடிப்பது அல்ல தண்டிப்பதற்கு பல வழிகள் உண்டு. பிள்ளைகளின் கதைகளை அவதானமாக கேட்டு அவர்களின் பிழைகளை அறிந்து ஆரோக்கியமான முதிர்ச்சிப் பாதையில் அவர்களை அழைத்துச் செல்லவேண்டும்.



www.ataaspirations.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


All Electrical Items under one roof!!
RUBAN ELECTRICALS & PHONES
No.1 Kandy Road, Kodikamam
CALL
0776 351876
யாழ் - கொழும்பு டிக்கட் முற்பதிவு

கெட்டதாக இருந்தால் கெட்டவை பதியப்படுகின்றன. மிக முக்கியமாக அவர்கள் தமது பெற்றோர்களின் நடத்தைகளையே அதிகம் பின்பற்றுகிறார்கள். எனவே பெற்றோர்கள் சிறந்த முன் மாதிரிகளாகத் திகழவேண்டும். அவர்கள் குழந்தைகளுக்கு அறிவுரை சொல்பவர்களாக மட்டும் நின்றுவிடாது தாங்களும் அதைப் பின்பற்றி முன்மாதிரிகளாக நடந்து காட்ட வேண்டும்.

### குழந்தைகள் தன்னம்பிக்கை சுய கௌரவம் என்பனவற்றுடன் வளர்வதற்கான வாய்ப்பைப் பெற்றோர் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

பல பெற்றோர் தமது பிள்ளைகள் வாழ்க்கையில் உயர்ந்தவர்களாக சிறந்தவர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்களேயொழிய அதற்கான முயற்சிகள் எதனையும் மேற்கொள்வதில்லை. பெற்றோர் குழந்தைகளிடம் நியாயமான நேர்மையான துணிவு உருவாக வழி செய்யவேண்டும் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைச் சந்திக்கவும்.அவற்றை எதிர்த்துப் போராடி முயன்று முன்னேறவும் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை அவசியம். குழந்தைகளிடம் தன்னம்பிக்கையையும் சுய கௌரவத்தையும் வளர்த்துக் கொள்வதற்கு குழந்தை யாரை முக்கியமானவர் எனக் கருதுகின்றதோ அவரின் மூலம் குழந்தையின் திறமைகளைப் பாராட்டுவதற்கு சந்தர்ப்பமளிக்க வேண்டும். பிள்ளைகளின் நற்செயல்களுக்கு அவரின் மூலம் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

இல்லையேல் பெற்றோரே அதனை மேற்கொள்ளலாம். குழந்தைகளிடத்தில் குறித்த துறையில் அவர்களுக்குள்ள தன்னம்பிக்கையை உதாரணமாகக் காட்டி மற்றவற்றிலும் இது போன்று வளர்த்துக் கொண்டால் அது வாழ்க்கைக்கு உதவும் என்பதை உணர்த்த வேண்டும். உதாரணமாக குழந்தை விளையாட்டுத் துறையில் வெற்றி பெறும் போது " கல்வித் துறையிலும் உன்னால் சாதிக்க முடியும்" என்ற உணர்வை பெற்றோர் அவர்களுக்கு ஊட்டவேண்டும். "என்னால் முடியும்" என்ற நம்பிக்கை அவர்களிடம் ஏற்பட்டுவிட்டால் போதும். அவர்களின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும். மேடும் பள்ளமும் நிறைந்த வாழ்க்கைப் பாதையை அவர்கள் தாங்களாகவே எதிர்காலத்தில் சமாளிக்கக் கூடிய தன்னம்பிக்கையுடன் வளர்வர்.

### பெற்றோர் தமது குழந்தைகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.


பல பிள்ளைகள் தங்களது பெற்றோரை எதிர்த்துப் பேசுகின்றனர்.அந்த நேரத்தில் பெற்றோர் எதிர்வாதம் புரிந்து வாக்குவாதத்தில் ஈடுபடாமல் பிள்ளைகள் எதிர்த்துப் பேசும்போது தங்களுடைய மனம் புண்படுகின்றது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அதை அவர்கள் எண்ணி வருத்தமடையும் வகையில் உணர்த்தல் வேண்டும்.பெற்றோர் எதைச் சொன்னாலும் அவர்களுடைய நன்மைக்குத் தான் சொல்கிறார்கள் என்பதை அவர்கள் தங்கள் பிள்ளை பல பேருக்கு முன்னால் இருக்கும் போது சொல்லாமல் தனியே இருக்கும்போது சொல்ல வேண்டும். ஏனெனில் தாம் மற்றவர்கள் முன் அதிகாரம் செய்யப்படுவதையோ கட்டுப்படுத்தப் படுவதையோ பிள்ளைகள் விரும்புவதில்லை.

### பெற்றோர் பாரபட்சம் காட்டுவதைத் தவிர்க்கவேண்டும்.

பெற்றோர் தமது எல்லாப் பிள்ளைகளையும் சமமாக நடாத்துதல் வேண்டும். பெற்றோர் தமது எல்லாப் பிள்ளைகளும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் அவர்களோ குழந்தைகள் தம்மிடையே சண்டை பிடிப்பதற்கு காரணமாகின்றனர். பெற்றோருக்கு எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரித்தான். ஆனால் சிலர் ஒவ்வொருவர் மீது ஒவ்வொரு விதமாக அன்பைக் காட்டுகின்றனர்."எனக்கு மூத்த மகனைத் தான் பிடிக்கும்". "பொம்பிளைப் பிள்ளைல தான் எனக்கு விருப்பம்" என்று சில பெற்றோர் கூறுவது இதற்கு உதாரணமாகும். இவ்வாறு பாகுபாடாகக் காட்டப்படும் அன்பு பிள்ளைகளின் மனதில் பகையுணர்வை வளர்க்கின்றது. இது சகோதரர்கள் எதிர்காலத்தில் நிரந்தர பகையாளிகளாக மாறுவதற்கும் காரணமாகலாம். எனவே பெற்றோர் தமது பிள்ளைகளிடத்தே பாகுபாடு காட்டுதலைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

### பெற்றோர் பிள்ளைகளைக் கடுமையாக தண்டிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகள் தவறு செய்யும்போது அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்.அவர்கள் தவறு செய்யும்போது பொருத்தமான முறையில் கையாள்வதன் மூலம் அவர்களைத் திருத்தலாம். உதாரணமாக குழந்தை ஒரு தவறான செயலைச் செய்யும் போது " நீ கடவுளுக்கு விருப்பமில்லாததைச் செய்துவிட்டாய். கடவுள் கோபிப்பார். கடவுள் தண்டிப்பார்.." எனக் குறிப்பிடுதல். "நீ இத்தகைய செயல்செய்ததால் உனக்கு பரிசுப் பொருட்கள் வாங்கித் தரப்படமாட்டாது." எனக் குறிப்பிடுதல் மூலம் குழந்தையைத் திருத்தலாம். சில பெற்றோர் தமது பிள்ளைகள் சிறிய தவறைச் செய்யும்போது கடுமையாகத் தண்டிக்கும் அதே வேளை வேறொரு சந்தர்ப்பத்தில் மிகப் பெரிய குற்றச் செயலைச் செய்யும் போது கண்டு கொள்ளாமல் விட்டு விடுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது அவர்களது ஆளுமை வளர்ச்சியைக் கடுமையாகப் பாதிக்கும்.மேலும் குழந்தை நேரான நல்ல செயல்களைச் செய்யும்போது அதைக் கண்டுகொள்ளாமல் விடாது அவர்களின் நல்ல செயல்களுக்குப் பாராட்டு பரிசு வெகுமதி **(Reward)** என்பவற்றை வழங்குதல் வேண்டும். அது மேலும் அவர்கள் நல்ல செயல்களைச் செய்வதைத் தூண்டுவதாக அமையும். பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அதைச் செய்யாதே இதைச் செய்யாதே அது கெட்டது அது கூடாது என்று கட்டளை யிடுகின்றார்கள்.


மாறாக எதைச் செய்யவேண்டும்.எது நல்லது என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

**பெற்றோர் குழந்தைகளுக்கு அளவுக் கதிகமான சுதந்திரத்தை வழங்குவதையும் அளவுக்கதிகமாக கட்டுப்பாடுகள் விதிப்பதையும் தவிர்க்க வேண்டும்.**

மாறாக எதைச் செய்யவேண்டும்.எது நல்லது என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

கட்டுப்பாடு சுதந்திரம் இந்த இரண்டுமே அளவுடன் இருந்தாக வேண்டும். அளவுக் கதிகமான கட்டுப்பாடு அளவுக் கதிகமான சுதந்திரம் இரண்டுமே தவறு செய்வதைத் தூண்டுவதாக அமையும். எனவே இவை இரண்டும் அளவுடன் இருத்தல் வேண்டும்.

அனைத்து பத்திரிகைகளுக்குமான
**விளம்பரங்கள்**
உரிய நேரத்தில் சிறந்தமுறையில் கட்டணக்கழிவுடன் பிரசுரித்தக் கொடுக்கப்படும்
**077 5016757**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவாக இருக்கும். அதாவது அவர்களின் Course fee ஆனது அவர்கள் தேர்ந்தெடுக்கும் பாடநெறியில் தங்கி இருப்பதுடன் ஒரு மாதத்திற்கான வாழ்க்கைச் செலவாக £ 533 ஆக 9 மாதங்களுக்கு மட்டும் (9 X £ 533 = £ 4797) அவர்களது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் வங்கிக்கணக்கில் வைத்திருக்க வேண்டும்.

**6. இந்த மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தமது வாழ்க்கைச்செலவுக்காக எவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டும்?**

மாணவர்கள் தேர்ந்தெடுத்த பாடசாலை London இற்கு வெளியேயாயின் ஒரு மாதத்திற்கு £ 600 ஆக 9 மாதங்களுக்கும் (9 X £600 = £5400) ஆகவும் London இற்கு உள்ளேயாயின் ஒரு மாதத்திற்கு £ 800 ஆக 9 மாதங்களுக்கும் (9 X £800 = £7200) ஆகவும் இருக்க வேண்டும்.

**7. இந்த மாணவர்களின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் வங்கிக் கணக்கில் உள்ள பணம் எவ்வளவு காலத்திற்கு இருந்ததாக இருக்கவேண்டும்?**

குறைந்தது 28 நாட்களாவது அவர்களது வங்கிக்கணக்கில் இருந்திருக்க வேண்டும்.

**8. இந்த மாணவர்களின் பெற்றோர் பாதுகாவலர் தவிர்ந்த உறவினர்களின் வங்கிக் கணக்கினைக் காட்ட முடியுமா?**

நிச்சயமாக இல்லை.

**9. சில மாணவர்களின் பெற்றோரால் அவர்களுடன் செல்ல முடியாத சந்தர்ப்பத்தில் அந்த மாணவர்களுக்கு வேறு வழிகள் உள்ளனவா?**

இவ்வாறான மாணவர்கள் UK நிரந்தர வதிவுரிமையுள்ள தமது உறவினர்களுடனோ அல்லது Boarding வசதியுள்ள பாடசாலைகளையோ தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

**10. 17 வயதில் UK செல்லும் ஒரு மாணவன் UK இல் 18 வயதை அடையும் நிலையில் அம்மாணவன் எவ்வாறு தமது விசாவை புதுப்பித்துக் கொள்ள முடியும்.?**

இந்த வகை மாணவர்கள் தமது விசாவை Tier 4 (General) Student ஆக UK இல் இருந்து கொண்டே புதுப்பித்துக் கொள்ள முடியும்.

**11. இந்த மாணவர்கள் கற்கக்கூடிய பாடநெறிகளின் Levels பற்றிக் கூற முடியுமா?**

16 வயதிற்குட்பட்ட மாணவர்கள் NQF எனப்படும் Level இல் 2 அல்லது அதற்கு குறைவாக படிக்கலாம். 16 அல்லது 17 வயது மாணவர்கள் பாடசாலைகளின் அனுமதித்தால் NQF Level 3 பாடநெறியைக் கற்கலாம்.



ATA Aspirations (Pvt) Ltd ஆனது முற்றிலும் இலவசமாக இந்த Tier 4 (Child) Student விசாவில் மாணவர்களை மட்டுமல்ல அவர்களது பெற்றோரையும் UK அழைத்துச் செல்லத் தயாராகவுள்ளது. போலியான முகவர்களிடம் பணத்தைக்கொடுத்து ஏமாந்து கொள்ளாமல் உங்கள் தெரிவு சரியாக இருக்கவேண்டும் என்பதையே எமது நிறுவனம் விரும்புகிறது.இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும் உங்கள் சந்தேகங்களுக்குமான இலவச ஆலோசனைகளுக்குத் தொடர்பு கொள்ள 0112 722990 அல்லது 0774939756 இனை அழுத்துங்கள்.

தனது மனைவிக்கு அடிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள் முழுப்பிழை. பிழை மனைவியில் இருந்தாலும் ஒருவரைத்தண்டிக்கும் உரிமை இன்னொரு மனிதனுக்கு இருப்பதில்லை. அவ்வாறு தண்டிக்கும் கணவன் அந்த மனைவியின் மேல் கை வைக்கும் அளவிற்கு தான் ஒரு தப்புமே செய்யாத உத்தமனா என்று அவன் தன்னைப் பரிசீலிக்க வேண்டும். ஒரு கணவன் தனது மனைவிக்கு அடிப்பது இரண்டு காரணத்தினால்.

1. மனைவி பிழை விட்டால்
2. தனது இயலாமை / தனது பிழை

முதலாவதாக இருப்பினும் அடிக்கும் உரிமை கணவனுக்கு இல்லை.இரண்டாவதுதான் இங்கு பெரும்பாலும் நடப்பதுண்டு.முதலாவதாயின் அந்த மனைவி அந்த கணவனுடன்(பிழை செய்யும் மனைவி)சேர்ந்து வாழவேண்டிய அவசியமில்லை.கணவன் பிழை விடுபவன் அல்லது அவனது இயலாமை அவனுக்குள்ள பிரச்சனையின் காரணமாகவே அவன் மனைவியைத் துன்புறுத்துகிறான்.இன்னோரு ஆணுடன் சரி நிகரிற்கு நிற்க முடியாத கோழையான ஆணே மெல்லியல்புள்ள பெண்ணின் மீது தனது பலாத்காரத்தை பிரயோகிக்கின்றான்.உடல் உள ரீதியான பிரச்சனைகளுக்கும் வேறு சொல்ல முடியாத பல பிரச்சனைகளுக்கும் உட்பட்ட பெரும்பாலான ஆண்களே எதிர்க்கமுடியாத பெண்ணின் மீது தனது ஆதிக்கத்தை செலுத்துகின்றான்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் பராமரிப்புக்கான புத்தம் புதிய தீர்வு


VISION CARE OPTICAL SERVICES

## VISION CARE

இல. 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1808

**T: +94 11 2681173 | 2681172 | 5334931**
**F: +94 11 2681173 | 5334928**
**info@visioncare.lk | www.visioncare.lk**

அநுராதபுரம் (+94) 25 2226261 | பண்டாரவளை (+94) 57 2222055| செலிங்கோ ஹெல்த்கெயார் சென்டர் (+94) 11 2336465 | காலி (+94) 91 2227997 | தி சென்ட்ரல் ஹொஸ்பிட்டல்ஸ் (+94) 11 2671003 | ஜா-எல (+94) 11 2229989 | யாழ்ப்பாணம் (+94) 21 2221808 | குருநாகல் (+94) 37 2230290 | மொறட்டுவ (+94) 11 2647020 | இரத்தினபுரி (+94) 45 2225021| வென்னப்புவ (+94) 31 2245649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓசையின் கவிதை அரங்கம்

### அலை ஓசை

அழகான மலர்களெல்லாம் நல்வாசம் தருவதில்லை.
ஆனாலும் மகளிர் அவற்றைச் சூடாமல் விடுவதில்லை
அலைஓசை இதழ்கள் எல்லாம் நுகர்வோரின் விருப்புரிமை
ஆதலால் வர்த்தகர்கள் பெரும்வளத்துடனே திகழ்கின்றார்

அலைஓசை இளமங்கை நுகர்வோரின் காதலியாள்.
வர்த்தகரின் உற்பத்தி அவள் அழகின் மூலதனம்
விளம்பரத்தால் தன்சேவைதனை உவந்தளிக்கும் நல்நங்கை
வாழ்க அவள் செயல் வெற்றி வாசகர்கள் திருப்தியுடன்

என்ன வளமில்லை அலை அடிக்கும் ஓசையிலே!
அழகான விளம்பரங்கள் கலாச்சாரக் கண்டனங்கள்
பெண்ணியச் சிறப்புரிமை தொழில்நுட்ப விளக்கங்கள்
மழலைகளின் ஆக்கங்கள் கவிதைகளின் அரங்கங்கள்
அள்ளிமாந்துவோம் அருகருகாய் கரம் கோர்த்து
பயனடைந்தோர் போற்றுவோம் புதுமை மலர வாழ்த்துவோம்.


சரா

### நிறைவு

ஆகாயம் உன்னை தொட
பூலோகம் வர முடியாமல்தான்
மழை நீரால் தொடுகிறது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# CARGO SERVICES

**G.T.V. Enterprises (PVT.) Ltd.**
**No.18/3, Dr.E.A.Cooray Mawatha, Colombo 06.**
**Tel:011 236 0926, 011 255 9849 Fax:011 263 1139**
**Email:gtvcourier@yahoo.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It's Very **Difficult** to find Top-Class

# **HOTEL** in Jaffna

## **We will guide you**

## **Contact: 021 222 3966**






*Hotel Lux Etoiles*





*Hotel Anish Park*

**Hotel Lux Etoiles**
No: 34, Chetty Street Lane, Nallur,
Jaffna, Sri Lanka.
Tel: 021 222 3966
Fax: 021 222 0606


**Hotel Anish Park**
No: 109, Upper Lake Road, Nasby House
Nuwara Eliya, Sri Lanka.
Tel: 052 222 3966
Fax: 052 222 3033

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னியின் செல்வன்

## இரண்டாம் அத்தியாயம்

### ஆழ்வார்கடியான் நம்பி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ இவ்வளவு தூரமும் பிரயாணம் செய்த போது நிறைவேற்றியாகி விட்டது. இன்னும் இரண்டு நாளையப் பிரயாணம் தானே மிச்சமிருக்கிறது? அதுவரை பொறுமையுடம் இருந்தே தீர வேண்டும்.

ஆதவன் மறைவதற்குள் கடம்பூரை அடைய வேண்டும் என்ற கருத்துடன் சென்று கொண்டிருந்த வந்தியத்தேவன் சிறிது நேரத்துக்கெல்லாம் வீர நாராயணபுர விண்ணகரக் கோயிலை நெருங்கினான்.

அன்று ஆடித் திருமஞ்சனத் திருவிழாவும் சேர்ந்திரந்தபடியால் கோயிலைச் சுற்றியுள்ள மரத் தோப்புகளில் பெரும் ஜனக்கூட்டம் சேர்ந்திருந்தது.

பலாச் சுளைகளும் வாழைப் பழங்களும் கரும்புக் கழிகளும் பலவகைத் தின்பண்டங்களும் விற்பவர்கள் ஆங்காங்கே கடை வைத்திருந்தார்கள். பெண்கள் தலையில் சூடிக் கொள்ளும் மலர்களையும், தேவ பூஜைக்குரிய தாமரை மொட்டுக்கள் முதலியவற்றையும் சிலர் விற்றுக் கொண்டிருந்தார்கள். தேங்காய், இளநீர், அகில், சந்தனம், வெற்றிலை, வெல்லம், அவல், பொரி முதலியவற்றைச் சிலர் கும்பல் கும்பலாகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அங்காங்கே வேடிக்கை விநோதங்கள் நடந்து கொண்டிருந்தன. ஜோசியர்கள், ரேகை சாஸ்திரத்தில் வல்லவர்கள், குறி சொல்லுகிறவர்கள், விஷக்கடிக்கு மந்திரிப்பவர்கள், இவர்களுக்கும் அங்கே குறையில்லை. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சென்ற வந்தியத்தேவன் ஓரிடத்தில் ஒரு பெருங்கூட்டம் நின்று கொண்டிருப்பதையும் அந்தக் கூட்டத்து க்குள்ளேயிருந்து யாரோ சிலர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்யும் சத்தம் வருவதையும் கவனித்தான். என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் பீறிக் கொண்டு எழுந்தது. அந்த ஆவலை அடக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை. கூட்டத்துக்கு வெளியில் சாலை ஓரமாகக் குதிரையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான். குதிரையை அங்கேயே நிற்கும்படி தட்டிக் கொடுத்துச் சமிக்ஞையால் சொல்லிவிட்டுக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே போனான்.

அங்கே விவாதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மூன்றே பேர்தான் என்பதைப் பார்க்க அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் விவாதத்தில் ஈடுபட்டவர்கள் மூன்றே பேர்தான் என்றாலும், கூட்டத்திலிருந்தவர்கள் பலர் அவ்வப்போது அவரவர்களுக்கு உகந்த வாதக்காரரின் கட்சியை ஆதரித்துக் கோஷங்களைக் கிளப்பினார்கள். அதனாலேதான் அவ்வளவு சத்தம் எழுந்தது என்பதை வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். பிறகு என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதைக் கவனித்தான்.

வாதமிட்ட மூவரில் ஒருவர் உடம்பெல்லாம் ஊர்த்வபுண்டரமாகச் சந்தனம் அணிந்து தலையில் முன் குடமி வைத்திருந்த வைஷ்ணவ பக்த சிகாமணி. கையில் அவர் ஒரு குறுந்தடியும் வைத்திருந்தார். கட்டையாயும் குட்டையாயும் வைரம் பாய்ந்த திருமேனியுடன் விளங்கினார். இன்னொருவர் தமது மேனியெல்லாம் பட்டை பட்டையாய்த் திருநீறு அணிந்திருந்த சிவபக்தர். மூன்றாவது மனிதர் காவி வஸ்திரம் தரித்துத் தலையையும் முண்டனம் செய்து கொண்டிருந்தார். அவர் வைஷ்ணவரும் அல்ல, சைவரும் அல்ல, இரண்டையும் கடந்தவரான அத்வைத வேதாந்தி என்று தெரியவந்தது.

சைவர் சொன்னார்: ஓ, ஆழ்வார்க்கடியான் நம்பியே! இதற்கு விடை சொல்லும்! சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்குப் பிரம்மாவும், அடியைக் காண்பதற்குத் திருமாலும் முயன்றார்களா, இல்லையா? முடியும் அடியும் காணாமல் இருவரும் வந்து சிவபெருமானுடைய பாதங்களில் சரணா-கதி அடைந்தார்களா, இல்லையா? "அப்படியிருக்கச் சிவபெருமானைக் காட்டிலும் உங்கள் திருமால் எப்படிப் பெரிய தெய்வம் ஆவார்? "

இதைக் கேட்ட ஆழ்வார்க்கடியான்நம்பி தன் கைத் தடியை ஆட்டிக் கொண்டு, "சரிதான் காணும்! வீர சைவ பாததூளி பட்டரே! நிறுத்தும் உம் பேச்சை! இலங்கை அரசனாகிய தசகண்ட ராவணனுக்கு உம்முடைய சிவன் வரங்கள் கொடுத்தாரே? அந்த வரங்கள் எல்லாம் எங்கள் திருமாலின் அவதாரமா-கிய இராமபிரானின் கோதண்டத்தின் முன்னால் தவிடுபொடியாகப் போகவில்லையா? அப்படியிருக்க, எங்கள் திருமாலைக் காட்டிலும் உங்கள் சிவன் எப்படிப் பெரிய தெய்வமாவார்? " என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் காவி வஸ்திரம் அணிந்த அத்வைத சந்நியசி தலையட்டுக் கூறியதாவது: நீங்கள் இருவரும் எதற்காக வீண் வாதம் இடுகிறீர்கள்? சிவன் பெரிய தெய்வமா, விஷ்னு பெரிய தெய்வமா என்று எத்தனை நேரம் நீங்கள் வாதித்தாலும் விவகாரம் தீராது. இந்தக் கேள்விக்குப் பதில் வேதாந்தம் சொல்கிறது. நீங்கள் கீழான பக்தி மார்க்கத்தில் இருக்கிற வரையில் சிவன் - விஷ்னு என்று சண்டையிடுவீர்கள். பக்திக்கு மேலே ஞானமார்க்கம் இருக்கிறது. ஞானத்துக்கு மேலே ஞானம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நிலையை அடைந்து விட்டால் சிவனும் இல்லை, விஷ்ணுவும் இல்லை. சர்வம் பிரம்மமயம் ஜகத். ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியார் பிரம்ம சூத்திர பாஷ்யத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்...

இச்சமயம் ஆழ்வார்காடியான் நம்பி குறுக்கிட்டு, "சரிதான் காணும், நிறுத்தும்! உம்முடைய சங்கராச்சாரியார் அவ்வளவு உபனிஷதங்களுக்கும் பகவத்கீதைக்கும் பிரம்ம சூத்திரத்துக்கும் பாஷ்யம் எழுதி விட்டுக் கடைசியில் என்ன சென்னார் தெரியுமா?

"பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் மூடமதே!"

என்று மூன்று வாட்டி சொன்னார். உம்மைப் போன்ற மௌடீகர்களைப் பார்த்துதான் "மூடமதே!" என்று சங்கராச்சாரியார் சொன்னார்!" எனக் கூறிதும், அந்தக் கூட்டத்தில் "ஆஹா" காரமும், பரிகாரச் சிரிப்பும் கரகோஷமும் கலந்து எழுந்தன.

ஆனால் சந்நியாசி சும்மா இருக்கவில்லை. "அடே! முன்குடுமி நம்பி! நான் "மூடமதி" என்று நீ சொன்னது சரிதான் ஏனென்றால், உன் கையில் வெறுந்தடியை வைத்துக் கொண்டிருக்கும் நீ வெறுந்தடியன் ஆகிறாய். உன்னைப் போன்ற வெறுந்தடியனோடு பேச வந்தது என்னுடைய மூடமதியினால்தானே?" என்றார்.

"ஓய் சுவாமிகளே! என் கையில் வைத்திருப்பது வெறுந்தடியல்ல. வேண்டிய சமயத்தில் உம்முடைய மொட்டை மண்டையை உடைக்கும் சக்தி உடையதுங் காணும்!" என்று கூறிக் கொண்டே ஆழ்வார்க்கடியான் கையிலிருந்த குறுந்தடியை ஓங்கினான். அதைப் பார்த்த அவன் கட்சியார் ஓஹோ!" என்று ஆர்ப்பரித்தனர்.

அப்போது அத்வைத சுவாமிகள், "அப்பனே! நிறுத்திக் கொள்! தடி உன்னுடைய கையிலேயே இருக்கட்டும். அப்படியெ நீ உன் கைத்தடியால் என்னை அடித்தாலும் அதற்காக நான் கோபங்கொள்ள மாட்டேன். உன்னுடன் சண்டைக்கு வரவும் மாட்டேன். அடிப்பதும் பிரம்மம் அடிபடுவதும் பிரம்மம். என்னை நீ அடித்தால் உன்னையே அடித்துக் கொள்கிறவனாவாய்!" என்றார்.

ஆழ்வார்க்கடியான் நம்பி, "இதோ எல்லோரும் பாருங்கள்! பிரம்மத்தைப் பரப்பிரம்மம் திருச்சாத்துச் சாத்தப் போகிறது. என்னை நானே தடி கொண்டு தாக்கப் போகிறேன்!" என்று தடியைச் சுழற்றிக் கொண்டு சுவாமிகளை நெருங்கினான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வல்லவரையனுக்கு ஒரு கணம் அந்த முன் குடுமி நம்பியின் தைத்தடியை வழிமறித்துப் புடுங்கிக் கொண்டு அவனை அந்தத் தடியால் நாலு திருச்சாத்துச் சாத்தலாமா என்று தோன்றியது.

ஆனால் திடீரென்று சுவாமியாரைக் காணோம்! கூட்டத்தில் புகுந்து அவர் மறைந்து விட்டார். அதைப் பார்த்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த வைஷ்ணவ கோஷ்டியார் மேலும் ஆர்ப்பரித்தார்கள்.

ஆழ்வார்க்காடியான் வீரசைவருடைய பக்கமாகத் திரும்பி, "ஓய் பாத தூளி பட்டரே! நீர் என்ன சொல்கிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டம் எடுக்கிறீரா?" என்றான்.

"நானா? ஒருநாளும் நான் அந்த வாய் வேதாந்தியைப் போல் ஓட்டம் எடுக்க மாட்டேன். என்னையும் உம்முறைய கண்ணன் என்று நினைத்தீரோ? கோபியர் வீட்டில் வெண்ணைய் திருடி உண்டு மத்தால் அடிபட்டவன்தானே உம்முடைய கண்ணம்!..." என்று பாததூளிபட்டர் சொல்வதற்குள், ஆழ்வார்கடியான் குறுக்கிட்டான். "என்காணும் உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்து விட்டீரோ?" என்று கேட்டுக் கொண்டு கைத்தடியை வீசிக் கொண்டு வீர சைவர் அருகில் நெருங்கினான்.

ஆழ்வார்க்கடியான் நல்ல குண்டாதி குண்டன். வீரசைவராகிய பாததூளிபட்டரோ சற்று மெலிந்த மனிதர்.

மேற்கூறிய இருவரையும் விவாதத்தில் உற்சாகப்படுத்தி வந்தவர்கள் தாங்களும் கைகலக்க ஆயத்தமாகி ஆரவாரம் செய்தார்கள்.

இந்த மூடச் சண்டையைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் வல்லவரையன் மனதில் உண்டாயிற்று.

அவன் நின்ற இடத்திலிருந்து சற்றும் முன்னால் வந்து, "எதற்காக ஐயா நீங்கள் சண்டை போடுகிறீர்கள்? வேறு வேலை ஒன்றும் உங்களுக்கு இல்லையா? சண்டைக்குத் தினவு எடுத்தால் ஈழநாட்டுக்குப் போவதுதானே? அங்கே பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறதே?" என்றான்.

நம்பி சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்து, "இவன் யாரடா நியாயம் சொல்ல வந்தவன்!" என்றான்.

கூட்டத்திலே இருந்தவர்களில் சிலருக்கு, வந்தியத்தேவனுடைய வீரத் தோற்றமும் அவனுடைய அழகிய முகவிலாசமும் பிடித்திருந்தன.

"தம்பி! நீ சொல்லு! இந்தச் சண்டைக்காரர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லு! உனக்குப் பக்கபலமாக நாங்கள் இருக்கிறோம்!" என்று அவர்கள் சொன்னார்கள்.

"எனக்குத் தெரிந்த நியாயத்தைச் சொல்கிறேன். சிவபெருமானும் நாராயணமூர்த்தியும் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் சிநேகமாகவும் சுமூகமாகவும் இருந்து வருகிறார்கள். அப்படியிருக்க, இந்த நம்பியும் பட்டரும் எதற்காகச் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்?" என்று வல்லவரையன் கூறியதைக் கேட்டு, அக்கூட்டத்தில் பலரும் நகைத்தார்கள்.

அப்போது வீரசைவபட்டர், "இந்தப் பிள்ளை அறிவாளியாகவே தோன்றுகிறான். ஆனால் வேடிக்கைப் பேச்சினால் மட்டும் விவாதம் தீர்ந்துவிடுமா? சிவபெருமான் திருமாலை விடப் பெரிய தெய்வமா, இல்லையா என்ற கேள்விக்கு இவன் விடை சொல்லட்டும்!" என்றார்.


"சிவனும் பெரிய தெய்வந்தான், திருமாலும் பெரிய தெய்வந்தான் இருவரும் சமமான தெய்வங்கள். யாரை வேண்டுமானாலும் தொழுது கொள்ளுங்கள் சண்டை எதற்கு?" என்றான் வல்லவரையன்.


"அது எப்படிச் சொல்லலாம்? சிவனும் விஷ்ணுவும் சமமான தெய்வங்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரம் என்ன?" என்று ஆழ்வார்க்கடியான் அதட்டிக் கேட்டான்.

"ஆதாரமா? இதோ சொல்கிறேன்! நேற்று மாலை வைகுண்டத்துக்குப் போயிருந்தேன்.
அதே சமயத்தில் பரமசிவனும் அங்கே வந்திருந்தார். இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய உயரமும் ஒன்றாகவே இருந்தது. ஆயினும் ஐயத்துக்கு இடமின்றி என் கையினால் முழம் போட்டு இருவர் உயரத்தையும் அளந்து பார்த்தேன்..."

"அட பிள்ளாய்! பரிகாசமா செய்கிறாய்?" என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜனை செய்தான்.

கூட்டத்தினர், "சொல்லு, தம்பி! சொல்லு!" என்று ஆர்ப்பரித்தார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் ஓசை

நீங்கள் 10 வயதிற்கு உட்பட்டவரா?



## மூளைக்கு வேலை

### Sudoku

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | | 7 | 6 | 3 | |
| | | 7 | | 9 | | | | |
| | | 5 | | | 2 | | | 9 |
| 9 | 4 | | 6 | | | 5 | 7 | |
| 2 | | 1 | 7 | 3 | 4 | 9 | | 6 |
| | 6 | 8 | | | 9 | | 2 | 4 |
| 5 | | | 8 | | | 1 | | |
| | | | | 1 | | 2 | | |
| | 3 | 4 | 2 | | | 8 | | |

நாளைய உலகின் நாயகர்களான இன்றைய மழலை மொட்டுக்களுக்கான ஒரு பகுதியை ஒதுக்கி அவர்களின் ஆக்கங்களுக்கும் திறமைகளுக்கும் வழியமைக்கும் ஒரு ஊடகமாக அலை ஓசை வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பெற்றோர்களே உங்கள் செல்வங்களை ' மழலைகளின் ஓசையில் அங்கத்துவர்களாக இணைத்து அவர்களின் பக்கத்தை அவர்களின் ஆக்கங்களால் அலங்கரிக்க உங்களை அழைக்கிறோம். கீழுள்ள பகுதியை நிரப்பி புகைப்படத்துடன் எமக்கு அனுப்பி உங்கள் செல்வங்களை இலவசமாக அங்கத்துவர்கள் ஆக்குங்கள்.

## வர்ணம் தீட்டி மகிழுங்கள்







பெயர் : ...................................

வயது : ...................................

முகவரி : ...................................

...................................

தொலைபேசி இல : ...................................

பாடசாலை : ...................................

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**ATA Aspirations (Pvt.)Ltd.**
No.122B, Galle Road,
Dehiwala South, Colombo.
Call Monday- Friday
from 10.00 am - 5.00 pm.
Tel: 011 272 2990, 011 720 7989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் ஆக்கம்-04



J.Rajeewa



P.Kiloraa



R.Prabahar



S.Loshan



M.Salmaa

**சென்ற இதழின் நிறம் தீட்டுதல் போட்டியில் தேர்வு செய்யப்பட்டவர்கள்**

ரா.பிரபாகர், வயது 8, கொழும்பு 05
நி.டினேஸ், வயது 8, யாழ்ப்பாணம்
ச.சாருகா, வயது 4, தெகிவளை



## குட்டிக் கதை

தாய் ஒட்டகமும் குட்டி ஒட்டகமும் ஒரு மாலைப்பொழுதில் உலாத்திக் கொண்டிருந்தன.

குட்டி ஒட்டகம் படு சுட்டி. சதா வாய் ஓயாமல் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும். அன்றைக்கும் அப்படித்தான்.
"அம்மா! நமக்கு மட்டும் முதுகில் திமில் இருக்கே. ஏனம்மா?"

தாய் எப்போதும் பொறுமையாக பதில் சொல்லும். "நாமெல்லாம் இயல்பாகப் பாலைவனத்தில் வாழ்பவர்கள் இல்லையா! பாலைவனத்தில் தண்ணீர் பாலைவனச் சோலைகளில் மட்டும்தான் கிடைக்கும். தினம் தினம் கிடைக்காது. கிடைக்கும் தண்ணீரை முடிந்த மட்டும் நம் உடம்பில் சேமித்து வைத்துக் கொண்டு வேண்டும்போது உபயோகப்படுத்திக் கொண்டால் தண்ணீர் கிடைக்காத பாலைவனத்தில் பல நாள் சுற்றித் திரியவே நமக்கு இயற்கை திமிலைக் கொடுத்திருக்கு"

குட்டி திரும்பவும் கேட்டது. "அப்போ நமக்கு கண் இமை கெட்டியாக இருக்கே. மூக்கை மூடிக்கொள்ள மூடி இருக்கே? மத்த மிருகத்துக்கு அப்படி இல்லையே. அது ஏன்?"

தாய் ஒட்டகம் வாயை அசை போட்டுக் கொண்டு சொன்னது.
"பாலைவனத்தில் மணல் புயல் அடிக்கும்.அப்போ சட்டுன்னு ஒதுங்க இடம் கிடைக்காது.கண்ணுக்கும் மூக்குக்கும் பாதுகாப்பா மூடி இல்லைன்னா கண்ணுலயும் மூக்குலையும் மணல் போயிடுமே. அதனால்தான் நமக்கெல்லாம் இப்படி மூடி இருக்கு"

குட்டி இப்போது அம்மாவின் கால் குளம்பைப் பார்த்துக் கேட்டது. "இவ்வளவு பெரிய குளம்பு நமக்கு எதுக்கு?"

"அது கண்ணு, மணல்ல நடக்கும் போது நம்ம கால் மணல்ல புதையாம நடக்கத்தான்" பொறுமையாக பதில் சொன்னது அம்மா ஒட்டகம்.

"பல்லும் நாக்கும் இவ்வளவு கெட்டியாகவும் தடிப்பமாகவும் இருக்கே அது ஏன்?" இது குட்டி யோசனையுடன் கேட்ட கேள்வி.

அம்மா ஒட்டகம் சொன்னது. "பாலைவனத்தில் செடி கொடியெல்லாம் முரட்டுத்தனமாக இருக்கும். அதையெல்லாம் கடித்துச் சுவைத்துத் தின்ன வேண்டாமா?"

இப்போது குட்டி பட்டென்று கேட்டது."அம்மா! இதையெல்லாம் வைத்துக் கொண்டு லண்டன் குளிரிலே இந்த மிருகக்காட்சி சாலையிலே நாம ரெண்டு பேரும் என்ன செஞ்சுகிட்டு இருக்கோம்?".

## சிரி...சிரி

ஆசிரியர் 1: எதுக்கு சார் அந்த பையன பெஞ்ச் மேல நிக்கவச்சு இருக்கீங்க?
ஆசிரியர் 2: கட்டபொம்மன தூக்குல போட்ட இடம் எதுன்னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்.

"ஓட்டப்பந்தயத்துல கலந்துக்கப் போறேன். ஆசீர்வாதம் பண்ணு பாட்டி".
பார்த்து மெதுவா ஓடிப்போ வேகமாக ஓடி கைய கால ஒடிச்சுக்காதேடா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போலிகளை
அணியாது
சிறந்த தெரிவினால்
உங்கள்
பாதங்களை
அலங்கரியுங்கள்






KAKI SHOE

Imported Shoes for Ladies &
Gents from Bangkok & China

No: 160, Galle Road, Dehiwala.
Tel: 011 273 8837 Hotline: 071 901 0964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org